MAALAI MALAR

DATE: 07.01.2024

PAGE NO: 03

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# முதுகலை படிப்பில் மாணவர்கள் சேர இணையதளத்தில் விண்ணப்பம்

புதுச்சேரி,ஜன.7—

புதுவை பல்கலைக்கழக மக்கள் தொடர்பு பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:—

தேசிய தேர்வு முகமை சார்பில் நடத்தப்படும் பொது பல்கலைக்கழக நுழைவு தேர்வு (கியூட்— பிஜி) 2024—ன் அடிப்படையில் புதுவை பல்கலைக் கழகம் வழங்கும் பல்வேறு முதுகலை பட்டப்படிப்பு மற்றும் டிப்ளமோ படிப்புகளில் சேருவதற்கான ஆன்லைன் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான போர்ட்டல் கடந்த 26—ந் தேதி முதல் திறக்கப் பட்டுள்ளது. 2024— 25ம் கல்வி ஆண்டிற்கான முதுகலை பட்டப்படிப்பு மற்றும் டிப்ளமோ படிப்புகளில் சேர்க்கை பெற விரும்பும் மாணவர்கள் கியூட்—பிஜி தேர்வுக்கு இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

## ஆன்லைன் மூலம்...

மாணவர்கள் பாடப் பிரிவுகளுக்கான தகுதி களை கவனமாக பார்க்க வேண்டும். புதுவை பல்கலைக்கழகம் வழங்கிய தேவையான தேர்வுத்தாள் குறியீடு பல்கலைக்கழக இணைய தளத்தில் கிடைக்கும் தகவல் சிற்றேட்டில் தேர்ந்தெடுக்க வேண்டும். மேலும்என்ற தேசிய தேர்வு முகமையின் இணையதளத்தை விண்ணப்பதாரர்கள் தவறாமல் பார்க்க அறிவுறுத்தப் படுகிறார்கள்.

பல்வேறு முதுகலை பட்டப்படிப்பு மற்றும் டிப்ளமோ படிப்புகளுக்கு

ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்க ஜனவரி 24—ந் தேதி கடைசி நாளாக தேசிய தேர்வு முகமையால் அறிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் புதுவை பல்கலைக் கழகம் பி.எச்.டி. படிப்புகளுக்கு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான போர்ட் டலை திறந்துள்ளது. 2023— 24—ம் கல்வியாண்டிற்கான நுழைவுத்தேர்வு விலக்கு பெற்ற மாணவர்கள் பல்வேறு பி.எச்.டி.களுக்கு ஆன்லைனில் விண்ணப் பிக்கலாம். பி.எச்.டி.. படிப்புகளுக்கு விண்ணப்பபடிவத்தை சமர்ப்பிக்க வரும் 12—ந் தேதி கடைசி நாளாகும்.

மேலும் தகவலுக்கு புதுவை பல்கலைக்கழக இணைய தளத்தை விண்ணப்பதாரர்கள் பார்வை யிடலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.